# ரூ.8,126 கோடி மதிப்பிலான...

3ம் பக்கத் தொடர்ச்சி

விவசாயம் செழிக்கும், மக்கள் செழிப்படைவர், மாநிலம் செழிக்கும்.

எனவே, நாம் முடிந்த அளவுக்கு தண்ணீரை பாதுகாக்க வேண்டும். தண்ணீர் பிரச்னை என்பது, வெறும் தேசிய பிரச்னை அல்ல; இது, சர்வதேச விவகாரம்.

அதனால், எப்போதும் சிறு துளி பெரு வெள்ளம் என்ற மந்திரத்தை, ஞாபகம் வைத்து கொண்டால், எதிர்கால சந்ததிகளுக்கு உதவியாக இருக்கும்.

**மெட்ரோ ரயில்**

வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையிலான, சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட விரிவாக்கம், 9 கி.மீ., துாரம் உடையது.

சர்வதேச அளவில், கொரோனா பெருந்தொற்று பிரச்னை இருந்த நிலையிலும், குறித்த நேரத்தில் இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டு உள்ளது.

முழுதும் இந்திய ஒப்பந்ததாரர்களால், கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இதுவும், இந்தியாவின் சுயசார்பு திட்டத்துக்கு எடுத்துக்காட்டு.

சென்னை மெட்ரோ ரயில் திட்டம், இரண்டாம் கட்டத்துக்கு, மத்திய பட்ஜெட்டில், 63 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே ஒரே திட்டத்துக்கு, மிக அதிக நிதி ஒதுக்கப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்று. இந்த திட்டம் நகர்ப்புற மக்களின் வாழ்வையும், போக்குவரத்தையும் எளிதாக்க உதவும்.

மேம்பட்ட இணைப்பானது, மக்களுக்கு வசதியை தருவதுடன், வர்த்தகத்துக்கும் உதவும். சென்னை கடற்கரை – அத்திப்பட்டு ரயில் பாதையானது, அதிக போக்குவரத்து உள்ள பாதைகளில் உள்ள, தங்க நாற்கர திட்டத்தை சார்ந்ததாகும்.

சென்னை துறைமுகம் மற்றும் எண்ணுார் காமராஜர் துறைமுகம் இடையே சரக்கு போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதற்கு, அத்திப்பட்டு ரயில் பாதை உதவியாக இருக்கும்.

விழுப்புரம் – தஞ்சாவூர் – திருவாரூர் ரயில் பாதையில், 228 கி.மீ., நீளம் மின்மயமாக்கல், டெல்டா மாவட்ட மக்களுக்கு பயணத்துக்கும், உணவு தானிய சரக்கு போக்குவரத்துக்கும் உதவும்.

**ஆராய்ச்சி மையம்**

சென்னை, ஐ.ஐ.டி., யின் ஆராய்ச்சி பணிகளுக்காக, சென்னை அருகே தையூரில், 2 லட்சம் சதுர மீட்டர் பரப்பில், உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சி மையம் அமைய உள்ளது.

இந்த மையம், இந்தியாவில் முன்னணி ஆராய்ச்சி மையமாக, விரைவில் உருவாகும்.

இந்தியாவின் உற்சாகம் மற்றும் நேர்மறையான செயல்பாடுகளை, உலகமே உற்று நோக்குகிறது; 130 கோடி இந்திய மக்களின் கடின உழைப்பு மற்றும் வியர்வையின் காரணமாக, இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

புதிய கண்டுபிடிப்புகளுக்கு, இந்திய அரசு முடிந்தவரை, தேவையான உதவிகளை செய்கிறது.

அதற்கு எடுத்துக்காட்டாக, இந்த ஆண்டின் பட்ஜெட்டில், கடலோர பகுதிகளின் வளர்ச்சிக்கு சிறப்பு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

**மீனவர்களை காப்போம்**

இந்திய மீனவர் சமூகத்தை பார்த்து, நாடு பெருமைப்படுகிறது. இரக்க குணத்துக்கும், விடா முயற்சிக்கும், அவர்கள் சின்னமாக திகழ்கின்றனர்.

அதனால், மீனவர்களுக்கு உள் கட்டமைப்பை மேம்படுத்த, பட்ஜெட்டில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை சிறைகளில் இருந்த, 1,600க்கும் மேற்பட்ட மீனவர்கள் எங்கள் ஆட்சியின் போது விடுதலையாகி உள்ளனர். தமிழக மீனவர்களின், 313 படகுகள் விடுவிக்கப்பட்டு உள்ளன.

தற்போதைய நிலையில், ஒரு இந்திய மீனவர் கூட இலங்கை சிறையில் இல்லை. சென்னையில், ஐந்து நவீன மீன்பிடி துறைமுகங்கள் அமைய உள்ளன.

கடல் பாசி வளர்ப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. கடல்பாசி பயிரிடுவதை அதிகரிக்க, தமிழகத்தில் கடல் பாசி பூங்கா விரைவில் அமைக்கப்படும்.

மத்திய அரசை பொறுத்தவரை உள்கட்டமைப்பை மேம்படுத்துவதில், அதிக கவனம் செலுத்துகிறது.

அனைத்து கிராமங்களையும், இணையதள சேவை வழியே இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், விரிவான சுகாதார திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கல்வியில் இளைய சமூகத்தை முன்னேற்றவும், முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இது, இளைஞர்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

இந்தியாவை பொறுத்தவரை, கொரோனா தொற்றை எதிர்த்து மிக பலமாக போரிடுகிறது.

நாட்டை எந்த வகையில் முன்னேற்ற வேண்டும்; உலகின் சிறந்த நாடாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்ற இலக்குடன், பணிகளை மேற்கொள்கிறோம்.

இதைதான், இந்திய அரசியலமைப்பை அமைத்தவர்கள் விரும்பினர்.

இவ்வாறு, பிரதமர் மோடி பேசினார்.

விழாவில், கவர்னர் பன்வாரிலால் புரோஹித், முதல்வர் இ.பி.எஸ்., – துணை முதல்வர் ஓ.பி.எஸ்., – சபாநாயகர் தனபால், தொழிற்துறை அமைச்சர் சம்பத் மற்றும் தமிழக அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.